கள் சார்ந்துள்ள துறையைச் சார்ந்த வேறு டாக்டர் யாரேனும் அவருக்குப் பதிலாக அவர்களது பணியினைச் செய்ய அமர்த்தப்படுகின்றார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆம்.

தஞ்சை மருத்துவக் கல்லூரியில் பட்ட மேற்படிப்பு வகுப்புகள்

* 616. **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் M.D., M.S. போன்ற மேல் பட்டப்படிப்பு வகுப்புகள் தொடங்குவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, மாநிலத்திலே எந்த எந்த மருத்துவக் கல்லூரிகளிலே எம்.டி, எம்.எஸ்.-க்கான வகுப்புகள் இருக்கின்றன. எத்தனை சீட்டுகள் இருக்கின்றன என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இருக்கிற கல்லூரிகளுடைய பெயர்களை மட்டும் நான் சொல்ல முடியும். சென்னையில் சென்னை மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, மதுரையில், மதுரை மருத்துவக் கல்லூரி ஆகிய மூன்று மருத்துவக் கல்லூரிகளிலே எம்.டி. பொது மேல்பட்டப் படிப்பும், எம். எஸ். அறுவை சிகிச்சை மேல் பட்டப் படிப்பும் மற்றும் பல மேல்பட்டப் படிப்புக்களும் இடம் பெற்றிருக்கின்றன.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, எம்.டி., எம். எஸ். மேல் பட்டப்படிப்புகளில் சேருவது மிகவும் கடினமாக இருக்கிறது என்று இப்பொழுது கூறப்படுகிறது. ஆகவே, அப்படிப்பட்ட மேல் படிப்புகளில் சேர்ந்து படிக்க ஆர்வம் உள்ளவர்களை ஊக்குவிக்கும் முறையில், சில விதிமுறைகளைத் தளர்த்தியாவது அவர்களுக்கு வாய்ப்பளிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அது ஒரு தவறான தகவல். சேருவது கடினமாக இருப்பது மட்டுமல்ல, அதற்குப் பிறகு தேர்ச்சி பெறுவது அதைவிடக் கடினமான காரியம். பலபேர் 7, 8 தடவை கூடத் தேர்வுக்குச் சென்றுவிட்டு, சிபார்சு செய்யக் கூடப் பார்க்கிறார்கள். ஆக, அப்படிப்பட்ட நிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர்கள் திறமையுடன் படிக்க முடியாது திண்டாடுகிற நிலை அரசாங்கத்திற்கு நஷ்டம். ஆகவே, தேர்ந்தெடுக்கும்போதே, ஓரளவு திறமையானவர்கள், ஆர்வம் உள்ளவர்கள், அக்கறை உள்ளவர்கள் இவர்களைப் பார்த்துத் தேர்ந்தெடுப்பதால், இந்தப் படிப்புக்காக வீணாகிற பொருள் நஷ்டம் குறையும்.

1973 ஏப்ரல் 3]

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, இப்பொழுது எம்.எஸ்., எம்.டி. டிகிரிகளின் தன்மையை உயர்த்துவதற்கும் அதே நேரத்திலே நம்முடைய மாநிலத்திலே உள்ள டிபார்ட்மெண்டல் ஹெட்ஸ் வெளிநாட்டிலேயுள்ள திறமைசாலிகளுக்குச் சமமாக இருப்பதாலே அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளத்தொகை குறைவாக இருப்பதாலே 1,000 முதல் 1,300 வரை என்று இருப்பதால் அதைக் கொஞ்சம் உயர்த்துவதற்கும், அவர்களுக்குத் தெம்பு கொடுக்கக்கூடிய முறையிலே அவர்களுக்குக் கொடுப்பதற்கு அரசுக்கு திட்டமிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மேற்பட்டப் படிப்பு படித்த மருத்துவ வல்லுநர்கள் தமிழகத்திலே பேராசிரியர்களாக வரக்கூடிய வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினலும், வேறு மாநிலங்களைவிட இங்கே உள்ளவர்கள் அதிக வாய்ப்பைப் பெற்றிருக்கிருர்கள் என்பதாலும் மேற்பட்ட படிப்புப் படித்தவர்களுக்கு வாய்ப்புக்கள் குறைவாக இருக்கின்றன என்று சொல்வது தவருகும். மேற்பட்டப்படிப்பு படித்தவர்களேகூட நோயாளிகளுக்கு சிகிச்சை செய்துவருகிற பயிற்சியை அதிகமாகப் பெற்ருல்தான் சிறந்த நிபுணர்களாக ஆக முடியும். அந்தப் பயிற்சிக்கான வாய்ப்பும், அவர்களுக்கு வேலை வாய்ப்பும் ஏராளமாக இருக்கின்றன. எனவே இதிலும் எந்தவிதக் குறைபாடும் இல்லை. அவர்களுடைய சம்பளத்தை உயர்த்திக்கொண்டு போகிற நிலையில்தான் ஊக்கம் அளிக்கமுடியும் என்ற தத்துவத்தைப் பொதுவுடமைக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் சொல்வது எனக்கு வியப்பாகத்தான் இருக்கிறது.

திரு. கு. காமாட்சி : தஞ்சாவூரிலே எம்.டி., எம்.எஸ்., பட்டப் படிப்புகள் துவங்குவதற்கான திட்டம்பற்றிச் செயற்குறிப்பு இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னர்கள். அதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன். ஏதாவது இடர்ப்பாடுகள் இருக்கின்றனவா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : காரணம், ஏற்படுத்துவதற்குக் காரணம் இல்லை என்பதுதான். மேற்பட்டப் படிப்பு சிறந்த பேராசிரியர்கள் அதிகமாக உள்ள இடங்களிலேதான் துவங்குவதற்குப் பல்கலைக் கழகம் ஒத்துக்கொள்ளும். நான்கு மாணவர்கள் மேற்பட்டப் படிப்புப் படித்தால் ஒரு பேராசிரியர் பதவி ஏற்படுத்தவேண்டும் என்பது போன்ற பல விதிகள் உள்ளன. பல்கலைக் கழகம்கூட அதற்கான போஸ்ட் கிராஜுவேட் தகுதியுள்ளவர்கள் இருந்தால்தான் ஒத்துக்கொள்கிறது. இப்பொழுதே தமிழ்நாட்டிலே 3 கல்லூரிகளிலே மேற்பட்ட படிப்பு இருப்பதால் வேறு இடங்களிலே திறப்பது அவசியம் என்று கருதவில்லை, மேலும் அதற்காக ஏற்படும் பெருஞ்செலவையும் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும், எனவே அதற்கான வாய்ப்புக் கூறுகள் குறைவாக இருக்கின்றன.